**ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபை - 2018**

---

## 1.1 முனனைப்பழியுள்ள <u>அபிப்பிராயம்</u>

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நிதியத்தின் அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 <u>நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்</u>

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 <u>நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்</u>

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை

அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக

இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடியதான சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இற்கமைய மதிப்பீட்டு மீளாய்வாகச் சீராக்கல் செய்யப்பட வேண்டிய சபையின் வாகனங்களும் குளிரூட்டிகளினதும் தேய்மான நிதியேற்பாடு 20 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை குறைக்கப்பட்டமை முன்னைய காலப்பகுதிக்குரியதாகச் சீராக்கல் செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 14,811,960 | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் தேய்மான நிதியேற்பாடு 20 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை குறைக்கப்பட்டமை 2017 ஆம் ஆண்டின் போது பின்னோக்கி சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.இத்தவறினை திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை இத்தவறை திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சபையின் செயற்பாட்டு வருமானம் ரூபா 45,226,997 ஆக இருந்த போதும், பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரமும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கையின் பிரகாரமும் அவ்வருமானம் முறையே ரூபா 46,436,105 மற்றும் ரூபா 43,875,305 எனக் காட்டப்பட்டிருந்தன. வருமான வித்தியாசத்திற்கான | 45,226,997<br>45,226,597 | 46,436,105 (பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் 43,875,305 (தேசத்தைக் கட்டியெழுப்பு ம் வரி அறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு வருமானம்) | 1,208,108<br>(1,352,692) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கொடுப்பனவு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ள து. ஆயினும் காலாண்டு அறிக்கை உள்நாட்டு இறைவரிக்கு சமர்ப்பிக்கும் போது காலாண்டு இடையே வேறுபாடு இடம்பெற்றுள்ளது. இதற்காக திருத்திய அறிக்கை விரைவில் தருவாத அறியதருகின்றேன். | கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் உரிய அட்டவணைக ள் காலத்திற்கு காலம் ஒப்பிடப்பட வேண்டும். |

காரணம்
கணக்காய்விற்குச்
சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவம் சம்பந்தமான அலுவலகக் கைநூல் வெளியிடப்பட்ட போதும், அதற்குத் திறைச்சேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | மனிதவள முகாமைத்துவம் சம்பந்தமான அலுவலகக் கைநூல் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆந் திகதி அரச நிதிச் சுற்றறிக்கை | கடந்த ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்து அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அடுத்த ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் அரச நிதிப்பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2019 மே 08 ஆந் திகதி வரை பூர்த்தி | பதவியணியினர் பற்றாக்குறை காரணமாகும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களின் பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2019 மே 10 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை இயலுமான வரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 10,139,790 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,686,862 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,452,928 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு 2018 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா 10,340,435 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

சபையின் தராதரப்படுத்தல் வருமானம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 7,566,430 ஆலும் ரூபா 1,227,109 ஆல் அதிகரித்து இருந்ததுடன், பதவியணியினர் சம்பள செலவினம் ரூபா 2,527,578 ஆல் அதிகரித்து இருந்தது. பிரயாணச் செலவினத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நடப்பாண்டின் போது ரூபா 1,224,110 ஆல் குறைவடைந்து இருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

-------------------------------

2018 ஆம் ஆண்டின் நடைமுறை விகிதம், விரைவு விகிதம் முறையே 4.09:1 மற்றும் 4.89:1 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது அவ்விகம் முறையே 4.89:1 மற்றும். 4.76:1 ஆக இருந்தது.

.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------- | -------------------------- | ------------------ |
| (அ) | மேலதிக பணிப்பாளர் பதவியிணியினர் நடைமுறைக் கோவை அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் ஆட்சேர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதிய டீஎம்எஸ்/1601 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் வருடா வருடம் ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்யும் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கையில் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக பணிப்பாளர் பதவியிணியினர் ஆட்சேர்ப்பிற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கோரப்பட்டது. எனினும் பொருத்தமான விண்ணப்பதாரியொருவர் தெரிவுசெய்ய முடியவில்லை. 2014 ஒக்தோபர் 14 ஆந் திகதிய டீஎம்எஸ்/1601 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் சம்பள அளவு திருத்தம் செய்யப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அனுமதி கிடைத்தும் சமமான தகைமை பெறுமத் விண்ணப்பதாரிகள் | வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகளவிலானோர் சமமான நிறுவனங்களில் தற்போது நிரந்தர அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் விண்ணப்பிக்க விரம்பம் தெரிவிப்பதில்லை. இந்நிமைமையைக் கருத்திற்கொண்டு முகாமைத்துவ சேவைகள் தணிக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்காக அங்கீகாரமொன்று இதுவர கிடைத்திருக்கிவல்லை. நடைமுறைக் கோவை அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன் ஆட்சேர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. வருடா வருடம் ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்யும் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கையில் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | கனிஷ்ட முகாமையாளர் (செயலாளர்) பதவி 01, தொழில்நுட்ப உத்தியோகத்தர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் கடிதத்தின் பிரகாரம் | வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு |

| | | |
|---|---|---|
| (தகவல் தொழில்நுட்பம்) 01 பதவி மற்றும் சாரதி 01 பதவி என்பன 2019 மே 02 ஆந் திகதி வரை வெறறிடமாக காணப்பட்டது. | கனிஷ்ட முகாமையாளர் (செயலாளர்) பதவி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறில்லாவிட்டால் அதற்காக MA 1-2 இன் கீழ் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றை நிரந்தரமாக வழங்க முடியுமென எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் MA1-2 சேவை வகுதியின் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் வழங்க வேண்டுமென கோரிய வேண்டுகோள் AD-FL-01/2018/11/001 ஆம் இலக்க தொடர் இலக்கத்தில் 23.11.2018 ஆந் திகதி மேற் கொள்ளப்பட்டிருந்தது. புதிதாக முகாமைத்துவ பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டு உள்ளதாக அறிய தருகின்றேன்., தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக ஒரு விண்ணப்பதாரியே சமூகமளித்திருந்தார். எனினும் பின்னர் அவரும் நியமனத்தை பொறுப்பேற்க விருப்பமில்லையென அறவித்திருந்தார். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(இ) சபையினால் தராதர மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிறைவேற்று மட்டத்தில் கீழ் மட்ட தரங்களில் ஆட்சேர்ப்பு பதவிகளை ஏற்படுத்துவுதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்டாதிருந்ததுடன் இதன் காரணமாக சபையின் நடவடிக்கைளை மேம்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.

நிறைவேற்று மட்டத்தில் கீழ் கனிஷ்ட முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் கனிஷ்ட முகாமையாளர் செயலாளர் மற்றும் முகாமைத்துவு உதவியாளர் பதவிக்காக ஒரு பதவியில் ஒரு வெற்றிடத்திற்காக மூன்று பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் மேற்குறித்த விடயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கனிஷ்ட முகாமையாளர் செயலாளர் பதவிக்கு பதிலாக முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று வழங்குவதற்கு சபையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு நிறைவேற்று மட்டதிர் கீழ் மட்ட பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது எழுத்துமூல இனங்கப்பட்டிருந்தமையால் அண்மையில் நடைபெற்ற நேர்முக பரீட்சையில் அதற்கான ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் கோரி அனப்பிய கடிதத்திற்கு

| | | |
|---|---|---|
| | | பதிலாக கனிஷ்ட முகாமையாளர் செயலாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) இடைநிறுத்த முடியாதெனவும் தற்போது முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மூலம் நிறைவேற்றுவதில் தவறில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுமக்களுக்கு இடையே தராதரத்தை பிரசித்தப்படுத்தும் நோக்கில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு இடையே 04 பத்திரிகை விளம்பரங்கள் 2018 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருநத போதும் அப்பத்திரிகை விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை தராதர அங்கீகார சபையினால் எமது சேவை நாடுனர் தொடர்பாக பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பெறுபேறுகளக் பகுப்பாய்வும் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது 2018 ஆம் ஆண்டில் பொதுமக்களை அறிவூட்டும் ம்டங்கள் தப்பட்டிருந்த போதும் கீழே காட்டப்பட்ட விடயங்கள் அடிப்படையில் அது மீண்டும் மேலும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் செயற்படுத்துவது தொடர்பாக தீர்மானிக்கப் | திட்டமிடும் போது நடைமுறைச்சாத்தியமாக செயற்படுத்தக்கூடிய செயற்திட்டங்களா என பகுப்பாய்வு செய்து திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும். திட்டமிடப் பட்ட நடவடிக்கைகளை ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பட்டது.<br>(i) தராதர தொழில்நுட்பம் விடயங்கள் மற்றும் இணைந்த செயற்பாடொன்றாக இருந்ததுடன் தற்போது நாடுபூராகவும் உள்ள பொது மக்களுக்கு இடையே இது தொடர்பான அறிவு குறைந்தே உள்ளது.<br>(ii) ஆதலால் இப்பரிசோ தனைக்காக செலவாகும் வளங்கள் உயர் செயற்திறனாக பயன்படுத்துவதற்காக முதலாவது அறிவூட்டல் செயற்பாடு மேற் கொள்ளப்பட்டு அதன் பின்னர் பரிசோதனை மேற்கொள்வது மிகவும் சிறந்த ஒன்றாகும். | |
| (ஆ) | பணிப்பாளர் சபையினால் அமைச்சரவைத் தீர்மானங்களுக்குரிய ஒழுங்குககள் மற்றம் அவற்றின் பிரமாணங்களை செயற்படுததுவதற்காக 2018 ஆம் ஆண்டில் 15 கூட்டங்களை நடாததுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அக்கூட்டமொன்று அல்லது ஆண்டில் நடாத்துவதற்கு சபைக்கு முடியுமாக இருந்தது. | நாட்டில் செயற்படுத்தப்படும் ஒழுங்குபடுத்தும் நிறுவன தராதரப்படுத்தல் செயற்பாட்டிற்கு தொடர்ச்சியாக பங்களிப்பினை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டில் பிரதான ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் அனைத்திற்கும் செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு | நடப்பாண்டின் போது திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

திட்டமிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் போது உலக தராதரபடுத்தல் தினம் தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றுக்காக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களின் தொடர்ச்சியான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.